6th August 1966]

போன்ற பொருள்களை ரயிலில் ஏற்றிக் செல்வதற்குச் சலுகை அளிப்பது, மண் வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் மூலம் மண் பரிசோதனை செய்துதர உதவி புரிவது, நில வரியையும் தண்ணீர்த் தீர்வையையும் தள்ளுபடி செய்வது போன்ற சலுகை களை நமது அரசாங்கமும், இந்திய அரசும் அளித்துள்ளன.

திரு. ஆ. தங்கவேலு : ஒவ்வொரு தாலுகாவிலும் எவ்வளவு உயர்நிலமாக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு தாலுகாவிலும் என்று இல்லை. கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், திண்டிவனம் தாலுகாக் களில் அதிகமாக்கி இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்திருக் கிறார்கள்.

தீ விபத்துகள்

* *159 கேள்வி.*—**திரு. ம. கமலநாதன் :** *கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1966 ஜனவரி முதல், மார்ச்சு 31 முடிய தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் எத்தனை தீ விபத்துகள் ஏற்பட்டன ?

(இ) அவைகளினால் ஏற்பட்ட ஆட்சேதம், பொருட்சேதம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) During January 1966 to March, 1966 there were 62 fire accidents in Dharmapuri district and 60 fire accidents in North Arcot district.

(*b*) Five persons lost their lives and the loss of property was estimated at about Rs. 4,33,873.

* *160 கேள்வி*—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** *கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

தீயினால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள புறம்போக்குகளில் உள்ள பனை மரங்களைத் தேவைக் கேற்ற அளவு வெட்டிக்கொள்ள அனுமதிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இதற்கு முன்பு தீயால் பாதிக்கப் பட்ட அரிசனங்களுக்குத் தேவைப்படுகிற, குறைந்தது நாலைந்து பனை மரங்கள், புறம்போக்கு மரங்களை வெட்டிக் கொள்ள அனுமதித்தார்கள். இப்போது தீயால் பாதிக்கப்படுகிற அரிசனங் களுக்கு 30 ரூபாயும், துணி வாங்க 10 ரூபாயும் கொடுக்கிறார்கள். இந்த 30 ரூபாயில் ஒரு மரம்கூட இப்போது வாங்க முடியாது. இதை எந்தக் கணக்கில் வைத்துக் கொடுக்கிறார்கள் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS